செ.வெ.எண்: 150

**பத்திரிகைச் செய்தி** நாள் 01/03/2017

கன்னியாகுமரி மாவட்டம், கல்குளம் வட்டம், வேளிமலை வருவாய் கிராமத்தில் (குமாரபுரம் பேரூராட்சி பகுதிக்கு மட்டும்) குமாரபுரம் அரசு உயர்நிலைப் பள்ளியில் வைத்து மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின்ஹ மனுநீதித்திட்ட (இரண்டாம் கட்டம்) நிறைவு நாள் நிகழ்ச்சி, 08.03.2017 (புதன் கிழமை) அன்று காலை 11.00 மணியளவில் நடைபெறவுள்ளது.

07.02.2017 அன்று நடைபெற்ற மனுநீதி திட்ட முதல் கட்ட நிகழ்ச்சியின் போது பெறப்பட்ட மனுக்களுக்கான உரிய பதில்கள் இந்த இரண்டாம் கட்ட நிறைவு நாள் நிகழ்ச்சியில் சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களால் பொது மக்களுக்கு தெரிவிக்கப்படும். மேலும் இந்த நிகழ்ச்சியில் துறைவாரியாக அரசு நலத்திட்ட விபரங்களும் பொது மக்களுக்கு தெரிவிக்கப்படும்.

எனவே, குமாரபுரம் பேரூராட்சி பகுதிக்குட்பட்ட பொதுமக்கள் அனைவரும் இந்த நல்ல வாய்ப்பினை பயன்படுத்தி பயன் பெறுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

மாவட்ட ஆட்சித் தலைவருக்காக,
தனித்துணை ஆட்சியர்(ச.பா.தி),
கன்னியாகுமரி மாவட்டம்.

வெளியீடு:
செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்
நாகர்கோவில்